மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 19 வெள்ளிக்கிழமை (03-07-1992) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 218

## கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில்
# சண்டையை நிறுத்திய பின்னரும்
# குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சு!

## அலம்பிலில் மோதல்

மணலாறின் அலம்பில் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் திடீர் மோதல் ஒன்று இடம்பெற்றது.

சில நிமிட நேரம் நீடித்த இந்தச் சண்டையில் இராணுவத்தினருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இதேசமயம், அலம்பிலில் இருந்து படையினர் தண்ணீரூற்றுப்பகுதியைநோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## ஊரியான் பகுதி ஊடாக நேற்றுப் போக்குவரத்து

### காலை அப்பகுதியில் குண்டு வீச்சு

இயக்கச்சி, ஊரியான் பகுதி ஊடாக மக்கள் நேற்றைய தினம் போக்குவரத்துச் செய்தனர். அதேசமயம் தாண்டிக்குளம் ஊடாக வவுனியா, போக்குவரத்தும் வழமை போல் நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கணிசமான அளவு பயணிகள் நேற்று ஊரியான் பாதையால் சென்றனர். கடந்த சில நாட்களிலும் பார்க்க கூடுதலான மக்கள் நேற்று முத்திரைச் சந்தையில் இருந்து சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதே சமயம் —

இயக்கச்சிக்கும் ஊரியான் பகுதிக்கும் இடையில் — கோவில் வயல் பகுதியில் — பொம்மர்கள் நேற்றுக் காலை 8.30 மணியளவில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

ஹெலி ஒன்றும் நேற்றும் ஊரியான் பாதை மற்றும் கோவில் வயல் பகுதிகளில் பயணிகள் மீது வேட்டுக்களைத் தீர்த்தது, இதனால் ஒருவர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-76)

## இரைச்சல் போராட்டம்: எதிரணியினர் பலர் கைது!

### ஒருவர் பலி! 140 பேர் காயம்

தென் பகுதியில் நேற்று முன்தினம் எதிர்க் கட்சியினர் அரசுக்கு எதிராக நடத்திய ''ஜனகோஷாவ'' என்னும் இரைச்சல் எதிர்ப்புப் போராட்டத்தின் போது ஏற்பட்ட கலவரத்தில் டிக்வெலவில் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. 140 பேர் வரை காயம் அடைந்தனர்.

இதற்கிடையில் —

இப் போராட்டத்தில் கலந்து கொண்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் பலர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தமது கட்சியின் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவும் மற்றும் 11 பேரும் கண்டியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்றும் —

கட்சி உறுப்பினர்கள் மொத்தம் 23 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் திரு நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

கைது செய்யப்பட்ட விக்கிரமபாகு கருணாரத்னவும் ஏனையோரும் நேற்று கண்டி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் அவர்கள் ஆயிரம் ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (ஒ-10)

## சோழர் கால அம்மன் சிலை பூநகரியில் கண்டுபிடிப்பு

### புராதனச் சான்று முக்கியத்துவமுள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 3

பூநகரி, பல்லவராயன்கட்டுப் பகுதியில், சோழர் காலத்துக்குரிய ''ஸ்ரீ புவனேஸ்வரி'' அம்மன் விக்கிரகம் ஒன்று சாசனத்துடன் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

வடமாகாணத்தில் சாசனத்துடன் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பிரதான விக்கிரகம் என்ற வகையில், இது ஈழத்தமிழர் தொடர்பாகக் கிடைத்த புராதனச் சான்றுகளில் பல வகைகளிலும் முக்கியத்துவம் பெறுகிறது என்று இச்சிலையைக் கண்டுபிடித்த யாழ். பல்கலைக்கழக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரவுத் தாக்குதல்களால் மக்கள் பெரும் பதற்றத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 3

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் மோதல்களை நிறுத்தி விட்டதாகப் படையினர் நேற்று முன் தினம் கூறியிருந்த போதிலும் —

அதனைச் சான்றுப்படுத்தும் விதத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்றுக் காலை முதல் ஊரடங்கு நீக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் —

வடமராட்சி கிழக்கிலும், பளைப் பிரதேசத்திலும் விமானப் படையினர் நேற்றும், நேற்று முன் தினமும் அகோரமான முறையில் குண்டு வீச்சுகளைத் தொடர்ந்து நடத்தினர்.

நாகர் கோயில் பகுதியிலும் பளை இயக்கச்சிப் பகுதியிலும் இரவுவேளைகளிலும் குண்டு வீச்சு நடத்தப்பட்டதால் அப்பகுதி மக்கள் பெரும் பதற்றத்துடன் வாழ்கிறார்கள்.

மோதலை நிறுத்தியதாக அரச படைகள் கூறியது பெரும் தந்திரமான நடவடிக்கை என்று கருதப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் நேருக்குநேர் மோதி முன்னேறுவது பெரும் கஷ்டம் என்று அனுபவ ரீதியாகத் தெரிந்து கொண்டதாலும்—

மூன்று நாள் மோதல்களின் போதும் பல கட்டங்களிலும் படையினர் திணற வேண்டியதாயிற்று என்பதாலும்—

போர் ஓய்வு எடுத்துக் கொண்டு மீண்டும் பொருதுவதற்கான ஆயுதங்களைச் செய்யும் ஓர் இடைவெளியாகவே ''பலவேகயா -2'' நடவடிக்கையின் ஆரம்ப நோக்கம் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதாகக் கூறிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிப் பகுதியிலும் இருளில் திடீர் குண்டு வீச்சு!

### சீ-பிளேன் அடிக்கடி நோட்டம்

கிளிநொச்சி, ஜூலை 3

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் (புதன்) இரவு விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப் பட்டன.

இரவு 10.30 மணியளவில் வந்த அவ்ரோ விமானம் முரசுமோட்டை — முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள நவஜீவனத்தை நோக்கி முதல் குண்டை வீசியது. இதனால் சில கட்டடங்கள் சேதமடைந்தன. ஒருவர் சிறு காயமுற்றார்.

இரண்டாவது குண்டு இரணைமடுச் சந்திக்குச் சமீபமாகவுள்ள ''ராங்வியூ'' ஹோட்டலுக்கு அருகில் வீசப் பட்டது.

மூன்றாவது குண்டு கரடிப் போக்குச் சந்திக்கு அண்மையிலுள்ள வயல் வெளியில் விழுந்து வெடித்தது.

கிளிநொச்சியில் நள்ளிரவு வேளையில் பரவலாக நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களினால் மக்கள் பெரும் பதற்றமுற்றனர்.

இதேசமயம், கிளிநொச்சிப் பகுதிகளில் தற்போது சீ-பிளேன் அடிக்கடி வட்டமிட்டு நோட்டமிட்டு வருகின்றது. இதனால் மக்கள் பீதியடைந்து உள்ளனர். (ஒ-76)

### சில தீய சக்திகள்

## தமிழர் - முஸ்லிம்கள் இடையே
# மோதலை ஏற்படுத்த முயற்சி

### முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 3

தமிழ்க் கட்சிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையை குழப்பி, அவ்விரு சமூகங்கள் மத்தியில் மோதலை ஏற்படுத்துவதற்கு சில தீய சக்திகள் முயற்சிப்பதாக முஸ்லிம்காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் குற்றஞ் சாட்டியுள்ளது.

அக்கட்சியின் தேசிய அமைப்புச் செயலாளர் மருதூர்கனியால் இந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்க் கட்சிகளும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் பரஸ்பரம் இரு சமூகங்களின் தனித்துவம், பாதுகாப்பு, பிரதேச உரிமை ஆகியவற்றை ஏற்றுக் கொண்டே பேச்சுவார்த்தையைத் தொடர்கின்றன. அவற்றுக்கு இடையில் இன்னும் எந்தவிதமான உடன்பாடும் எட்டப்படவில்லை.

ஆனால் சில தீய சக்திகள் பேச்சுவார்த்தைகளை குழப்பவும், தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் மோதலை ஏற்படுத்தவும், முஸ்லிம்களின் ஐக்கியத்தை, அதன் அரசியல் தனித்துவத்தை உடைக்கவும் திட்டமிட்டு செயற்படுவதாகத் தெரிகிறது.

இந்த சதிவலையில் முஸ்லிம்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களும் விழுந்துவிடக் கூடாது என்று எச்சரிக்க விரும்புகிறோம் -- என்று உள்ளது. [ஒ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு - நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம். (வ. து.)

## பங்கீட்டு அட்டைகளை ஒப்படைத்தல்

சகல பாவனையாளர்களுக்கும்,

ஜூலை 1992 மாதத்திற்கான இலவச உலர் உணவு விநியோகத்தை விரைவில் விநியோகம் செய்வதற்காக தங்களுடைய பங்கீட்டு அட்டைகளை உடன் எமது சங்க கிளைகளில் ஒப்படைக்கவும்.

[சி-2188] - பதில் பொதுமுகாமையாளர்.

## கண்ணீர் அஞ்சலி

### ஞானராசா இராஜ்குமார்

ஞானராசா இராஜ்குமார் கடந்த 25 - 6 - 92 இல் லண்டனில் காலமானார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

65, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
(21622)

தி. கணபதிப்பிள்ளை,
(ஓய்வு பெற்ற அதிபர்]
மற்றும் உறவினர்கள்.

## யாழ். இந்து தந்த செந்தமிழ் வீரன்

## 2 ஆம் லெப். மணிமாறன்

[வை. றமணானந்த சர்மா]

வீரஜனனம்: 12 — 04 — 1972
வீரமரணம்: 30 — 06 — 1992

ஆண்டு நூறு கடந்து வாழும்
அடிமை வாழ்வை வேண்டிடான்
மூண்ட போரில் முனைந்து சென்று
மோதி வானில் ஏறினான்
தாண்ட முன்னம் இருபதாண்டு
சரித்திரத்தில் ஏறினான்!
பூண்ட நூலில் பூண்ட கொள்கைப்
புனிதங் காத்த றமணனாம்
எங்கள் இந்து தந்த சர்மா
ஈழ அன்னைத் தவமகன்!
சிங்கமாகச் சினந்து பாய்ந்து
தீர வீரச் செயல்களால்
அங்கு கட்டைக் காட்டுப் போரில்
அற்புதங்கள் செய்தவன்
சங்கின் நாளை வெற்றி நாதம்
சாற்றும் அன்னான் நாமமும்!

யாழ். இந்துக்கல்லூரி
92 ஆம் ஆண்டு மாணவர்கள்

[5123]

## இதய அஞ்சலிகள்

யாழ். இந்து உயர்தர மாணவன்

### 2ஆம் லெப். மணிமாறன் (சர்மா)

(வை. ரமணானந்தசர்மா)

"உன் வழியின்படி நடக்க.........!"

வேட்டொலிகள் வீரமுடன்
விண்ணதிரும் யாழ் மண்ணில்
பாட்டொலிகள் மாவிட்ட புரமென்னும் மண்ணதிரும்
மீட்டொலியான் யாழிந்தின் மறப்புலிசர் மா வீரன்
கேட்டொலியார் பகைதன்னை
ஆட்டமிட வைத்திடுவான்.

நிலமென்னும் நல்லாளும் நடைபயில நடுநடுங்கிப்
பலமற்றுப் போயிடுவாள் புலிவீரர் புகழ்கேட்டு
யாழிந்தின் உயர்மன்றம் சாரணரின் தனிமன்றம்
வாழிந்துச் சர்மாவின் வழிநடையை இழந்ததுவோ.

வெஞ்சமரெங் கேநிகழும் விருப்புடனே அங்கேநான்
அஞ்சிநடுங் காநின்றே அரும்பெருமை ஆற்றிடுவேன்
டஞ்சைநிரா நெஞ்சுடையாய்
புகன்றாயே உன் 'அடியில்'
கொஞ்சிமகிழ் கொடும்பகையும் குடல்சரிய ஓடுதுபார்.

கடிவிடமே யானகணை கருங்கல்லாம் உன்னுடைய
துடியுடலைத் துளைசெய்யத் தயங்கியதாம் கேட்டாயா
இடிகுரலாய், நண்பருக்கு இன்குரலாய் உன்வழியின்
படிநடக்க எத்தனையோ புலிவீரர் வருகின்றார்.

கட்டுடலும் கலகலத்துப் போனதுவோ மணிமாறா
வெட்டுடனுன் வாய்ச்சொல்லும்
வீணாகிப் போனதுவோ
பட்டெனவே பறந்திடுமா புலிவீரா நீகொண்ட
திட்டமினிச் சோராது திறல்வீரர் பின்வருவர்.

91ஆம் ஆண்டு மாணவ -
நண்பர்கள்.

யாழ். இந்துக் கல்லூரி. [21615]

## மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 3
காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும், மணிவாசகர் குருபூசை எதிர்வரும் சனிக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.
அதனையொட்டி திருவாசகம் முற்றோதல், குருபூசை, பிரார்த்தனை ஆகியன சிறப்பாக நடைபெறவுள்ளன.

## பொங்கல் உற்சவம்

தென்மராட்சி, ஜூலை 3
செம்பியன்பற்று கன்னியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளி இரவு நடைபெறும்.

[இ-117]

## டோங்னோவா கப்பல் பற்றியும் விசாரணை

கொழும்பு ஜூலை 3
பதமநாபா கொலை தொடர்பாக விசாரணை நடத்தக் கொழும்பு வந்துள்ள இந்தியப் புலனாய்வுக் குழுவினர் இந்தியாவின் காரைக்கால் கடற்பகுதியில் கைப்பற்றப்பட்ட ''டோங்னோவா'' கப்பல் பற்றியும் விசாரணைகளை மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.
இதே வேளை —
கொழும்பு வந்துள்ள இரண்டு விசேட அதிகாரிகளும் பிரதிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [த]

## டில்லி - கொழும்பு விமானச் சேவை

கொழும்பு, ஜூலை 3
கொழும்புக்கும் புதுடில்லிக்குமிடையே நேரடி விமான சேவை எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பமாகும்.
எயர் லங்கா புதிதாக வாங்கியுள்ள எயர் பஸ் ஏ - 320 ரக விமானங்களில் ஒன்று இச்சேவையில் ஈடுபடுத்தப்படும்.
இவ் விமானங்கள் டிசம்பர் மாதம் இலங்கை வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.
தற்போது கொழும்பிலிருந்து பம்பாய், சென்னை, திருச்சி, திருவனந்தபுரம் ஆகிய இந்திய நகரங்களுக்கு நேரடி விமான சேவை நடைபெறுகிறது. [இ-10]

## தொழில்நுட்ப மாணவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நிர்மானத்துறை மேற்பார்வையாளர் பயிற்சி நெறியில் கல்வி பயின்று, 90 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பரீட்சைக்கு தோற்றாத மாணவர்களை நாளை காலை 9 மணிக்கு கல்லூரியில் சமூகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கோரியுள்ளார். [இ-3]

## பயணப்பையுடன் மறைந்த சைக்கிளோட்டி

தென்மராட்சி, ஜூலை 3
ரூபா 7, 500 பெறுமதியான பொருள்கள் அடங்கிய கைப்பையுடன் சைக்கிளோட்டி ஒருவர் மாயமாக மறைந்த சம்பவம் கடந்த திங்கள் இரவு ஊரியான் பகுதியில் இடம்பெற்றது.
பொம்மர்கள் வட்டமிடவே அவ்வழியே வந்த பயணிகள் மறைவிடங்களைத் தேடி நாலாபுறமும் ஓடினர் என்றும் —
இதனைப் பயன்படுத்தி சைக்கிளோட்டி பிரயாணப் பையுடன் மாயமாக மறைந்து விட்டார் என்றும் — கூறப்படுகின்றது.
பயணப்பையை இழந்தவர் சாவகச்சேரி காவல் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.
[இ-117]

புலோப்பளை அறத்தி
அருள்மிகு கண்ணகா பரமேஸ்வரி
அம்பாள் ஆலய வருடாந்த

## உற்சவ விழா

05 - 07 - 1992 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி,
13 - 07 - 1992 தேர்த்திருவிழாவும்,
14 - 07 - 1992 சமுத்திரதீர்த்தமும்,
15 - 07 - 1992 பட்டுத்தீர்த்தமும்
நடைபெறும்.

குறிப்பு:
11 - 07 - 1992 சனிக்கிழமை காலை தேர் வெள்ளோட்ட விழா நடைபெறும்.

பரிபாலன சபையினர்.

புலோப்பளை,
பளை.

[21621]

## வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## 75ம் ஆண்டு நிறைவு விழா

ஞாயிற்றுக்கிழமை — 05—07—92

இடம்;- வேம்படி மகளிர் கல்லூரி, மேபிள் தம்பையா மண்டபம்.

காலம்:- முற்பகல் 8. 30

நிகழ்ச்சி நிரல்:-

மு. ப 8. 30 — பாடசாலைக் கொடியேற்றல்
8. 45 — மங்கள விளக்கேற்றல்
9. 00 — உரைகள்
ஸ்ரீ. சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்
வண. எ. டபிள்யு. ஜெபநேசன், மெதடிஸ்த திருச்சபை, யாழ்ப்பாணம்.
தலைவர் — திருமதி.க. துரைராஜா
அதிபர் — செல்வி இ. இராஜரட்ணம்
பிரதம
விருந்தினர் — திருமதி. இ. சோமசேகரம்
9. 45 — திரைநீக்கம்
பாடசாலை நிறுவனர் ஓவியம்,
அதிபர்கள், உப அதிபர்கள் பெயர்ப் பட்டியல்
வரலாற்றுப் படிவங்கள்
மரம் நாட்டுதல் (வேம்பு)
10 15 — ஓவியக் கண்காட்சி
10. 30 — வருடாந்தப் பொதுக் கூட்டம்
ந.ப 12 30 — மதிய போசனம்
பி.ப 1. 30 — கலை நிகழ்ச்சிகள்
3. 00 — நிறைவு.

அங்கத்தவர்கள் மதிய போசனச் சீட்டுக்களைத் தலா ரூபா 75/- செலுத்தி 03-07-92 க்கு முன்பு பாடசாலையில் பெற்றுக்கொள்ளவும். (சி/2189)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 19 - 10 - 1945



மறைவு: 04 - 06 - 1992

### குமாரசாமி ஜெயக்குமார்

இன்று [03-07-92] வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டியிலும், 04-07-92 அன்று நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி ஜெ. பவளமணி,
சகோதரன் கு. பாலகுமார்,
மாமா, மாமி, மச்சான்மார், மைத்துனர்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

[21624]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம்

மன்னிப்புக் கேட்கத் தவறினால்

# "லேக்ஹவுஸி"டம் 39 கோடி ரூபா நஷ்டஈடு கேட்பாராம் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூலை 3

39 கோடி ரூபா நஷ்டஈடு கோரி, அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள "லேக்ஹவுஸ்" பத்திரிகை நிறுவனத்தின்மீது வழக்குத் தொடரப்போவதாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா எச்சரித்திருக்கிறார்.

தம்மைச் சம்பந்தப்படுத்தி 10-05-1992, 14-06-1992, 21-06-1992 ஆகிய திகதிகளில் வெளியான "சண்டே ஒப்சேர்வர்" மற்றும் 21-06-1992 இல் வெளியான "சிலுமின" ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கருத்துக்களை நிபந்தனையற்ற முறையில் வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும் என்றும் —

இது தொடர்பாக நிபந்தனையற்ற மன்னிப்பை தம்மிடம் அந்த பத்திரிகைகள் கோரவேண்டும் என்றும் திரு. ஜெயவர்த்தனா "லேக்ஹவுஸ்" நிறுவனத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தனது இவ்விரு கோரிக்கைகளும் அப்பத்திரிகைகளில் உடனடியாக பிரசுரிக்கப்பட வேண்டும் என்றும் திரு. ஜெயவர்த்தனா கேட்டுள்ளார்.

இதற்கிணங்க இப்பத்திரிகைகள் நடக்காத பட்சத்தில், "லேக்ஹவுஸ்" நிறுவன இயக்குநர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஒப்சேர்வரில் பணிபுரியும் பத்தி எழுத்தாளர்கள் இரண்டு பேர் ஆகியோர் மீது 39 கோடி ரூபா நஷ்டஈடு கோரி வழக்குத் தொடரப்போவதாகவும் திரு. ஜெயவர்த்தனா எச்சரித்துள்ளார். இந்த நஷ்டஈட்டுப் பணத்தைத் தாம் தர்மகாரியத்துக்கு கொடுக்கப்போவதாகவும் திரு. ஜெயவர்த்தனா தெரிவித்திருக்கிறார். (உ-எ)

## பல்லேகல முகாமில் மோதல்: ஒருவர் பலி; மூவர் காயம்!

கொழும்பு, ஜூலை 3

கண்டி பல்லேகலயில் உள்ள தடுப்பு முகாமில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஒரு கைதி கொல்லப்பட்டார், மூவர் காயமடைந்தனர்.

558 கைதிகள் உள்ள இந்தத் தடுப்பு முகாமில் பெரும்பாலும் ஜே. வி. பியினரே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட நாட்களாகவே இம்முகாமிலுள்ள கைதிகள் இடையே சண்டையும் சச்சரவும் இடம்பெற்று வந்ததாகவும் —

அதனைத் தொடர்ந்தே கோஷ்டி மோதல் வெடித்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர். [த]

## மட்டக்களப்பில் தமிழர் உயிருடன் தீமூட்டி எரிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் களிமடு என்னும் இடத்தில் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த கமலர் சின்னத்தம்பி, அவர் மனைவி தெய்வானைப் பிள்ளை ஆகியோரை சுட்டுப் பின்னர் தீமூட்டி எரித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு தமிழ்க்கிராமங்களில் கடந்த 27, 28ஆம் திகதிகளில் 20 தமிழர்கள் வரை சுட்டுக்கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தமை தெரிந்ததே.

இது குறித்து மேலும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

கண்ணப்பர் சின்னவன் [வயது65] என்பவரும் அவரது மனைவியும் தமது வாடியில் இருந்த வேளை வாடியுடன் சேர்த்துக் கொளுத்தப்பட்டனர்.

வெள்ளாச்சி மாலிப்போடி, தங்கம்மா மாலிப்போடி, மாலிப்போடி பத்மநாதன் ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வயலில் வேலை செய்துகொண்டிருந்த போது ஹெலி தாக்கி மரணமானார்கள்.

இதேவேளை —

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட 13 பேர் குறித்து இன்னும் தகவல் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இது தொடர்பாக அம்மாவட்ட இராணுவ அதிகாரி பிரிகேடியர் என். கே. பி. அங்கமனவிடம் புகார் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [த-3]

## ஒட்டோவினால் மோதுண்டு மரணம்

தென்மராட்சி, ஜூலை 3

இயக்கச்சி, சங்கத்தார் வயல் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து குடும்பத்தினருடன் நடந்து வந்து கொண்டிருந்த ஒருவர் ஒட்டோவினால் மோதுண்டு மரணமானார்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய் இரவு புதுக்காடு சந்தி பகுதியில் இடம்பெற்றது.

சங்கத்தார் வயலைச் சேர்ந்த க. கந்தையா [வயது 40] என்பவரே இறந்தவர் ஆவார். [இ-117]

## காயமடைந்த 5 படையினர் மரணம்!

கொழும்பு, ஜூலை 3

வெற்றிலைக்கேணியில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற மோதல்களின் போது காயமடைந்திருந்த 16 படையினரில் ஐந்து பேர் பின்னர் வைத்தியசாலையில் மரணமானார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (த-3)

## ஆரம்பக் கல்வி பயிலுநர் ஆசிரியர் பரீட்சை

கொழும்பு, ஜூலை 3

இம்மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள ஆரம்பக் கல்வி பயிலுநர் ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்கான பிரவேச அட்டைகள் இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் பரீட்சைப் பகுதி ஆணையாளருடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

## கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடக்கிலுள்ள தொண்டர் ஆசிரியர்களை ஏனைய மாவட்டங்களில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் போல் நிரந்தர நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (த)

## கஷ்டப் பிரதேச பாடசாலையானது

மானிப்பாய், ஜூலை 3

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை கஷ்டப் பிரதேசப் பாடசாலையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மேற்படி வித்தியாசாலை கஷ்டப் பிரதேசமாக நடைமுறைக்கு வந்திருப்பதாக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அறிவித்திருக்கிறார். (அ-90)

## பொது எழுதுநர் பரீட்சை

கொழும்பு, ஜூலை 3

அரசாங்க மாகாண அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவை 2 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான தகுதி காண் பரீட்சை ஆகஸ்ட் 22 ஆம் திகதி யாழ்ப்பாணம், கொழும்பு, காலி ஆகிய இடங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தட்டெழுத்தாளர் பரீட்சை இதே தினம் கொழும்பில் மட்டும் நடைபெறும். [இ-த]

## விசர்நாய்க்கடிக்கு இளம்பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

இரண்டு மாதங்களுக்கு முன் விசர்நாய்க் கடிக்கு உள்ளாகி உரிய காலத்தில் தடுப்பூசி மருந்து பாவிக்காது இருந்த இளம்குடும்பப் பெண் ஒருவர், கடந்த சனிக்கிழமை மரணமானார்.

திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த நாகராசா புவனேஸ்வரி [வயது 30] என்ற பெண்ணே மரணமானவர் ஆவார். [இ-117-10]

## இரண்டு நாள் மோதலில் 9 வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், ஜூலை 3

கடந்த செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களிலும் கட்டைக் காட்டில் இராணுவத்தினருடன் இடம் பெற்ற நேரடி மோதலில் 9 வீர வேங்கைகள் வீரமரணம் அடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதலில் வீரமரணம் அடைந்த 6 வேங்கைகளின் விவரம் வருமாறு:

மேஜர் குகன் [துரைச்சாமி துரைசிங்கன் - மட்டக்களப்பு] மேஜர் விடுதலை - லம்போ [ராசரட்ணம் ஆனந்தராசா- கொக்குவில்], லெப். கலையரசன் -விஜயதீபன் (கந்தப்பு சௌந்தரராசன் - மட்டக்களப்பு), 2 ஆம் லெப். மணிமாறன்-சர்மா (ரமணானந்த சர்மா - கோண்டாவில்), வீரவேங்கை தமிழரசன் [குலசிங்கம் குணாளன் - பருத்தித்துறை], வீரவேங்கை பிரணயன் - பிலிப் (அருளம்பலம் டிக்சோ - யாழ்ப்பாணம்].

புதன்கிழமை கட்டைக்காடு புல்லாவெளிப் பகுதியில் இடம் பெற்ற மோதலில் வீரமரணமடைந்த 3 வீர வேங்கைகளின் விவரம் வருமாறு:

வீரவேங்கை சேனன் [தங்கராசா தங்கப்பதக்கம் - கிளிநொச்சி], வீரவேங்கை கலைவாணன் (அருணாசலம் லவக்குமார் - அம்பாறை), வீரவேங்கை அன்புமாறன் (அன்ரன் அருள்நேசன் - நீர்வேலி - யாழ்ப்பாணம்) (த)

## தேர்தல் ஆணையாளர் அறிக்கை; ஆராயத் தெரிவுக்குழு நியமிக்கப்படும்

கொழும்பு, ஜூலை 3

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கை சம்பந்தமாக ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இது தொடர்பாக பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் ஆளும்கட்சி சமர்ப்பிக்கவிருக்கிறது.

1989 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி நடந்த நாடாளுமன்ற தேர்தல் குறித்து தேர்தல் ஆணையாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டது தெரிந்ததே. [த-3]

## இலங்கை இனப்பிரச்சினை: அ.தி.மு.க. மாநாடு தீர்மானம்

சென்னை, ஜூலை 3

"இலங்கை தமிழ் - சிங்கள மக்களிடையே நல்லுறவை வளர்த்து சமாதானத்தை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்"

இப்படியான தீர்மானம் ஒன்றை அ. தி. மு. க. நிறைவேற்றியுள்ளது.

கட்சியின் மாநாடு மதுரையில் நடந்தபோது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் இலங்கை ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு நல்லுறவை ஏற்படுத்த உதவ வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-3]


## JAFFNA COLLEGE ALUMNI ASSOCIATION

மேற்படி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் 25-07-1992 சனிக்கிழமை மு.ப. 8-30 மணிக்கு நடைபெற உள்ளது. இச் சங்கத்தின் இடம் பெயர்ந்த அங்கத்தவர்கள் தவறாது புதிய விலாசத்தை செயலாளரிடம் அறிவிக்கவும். மேலும் இதுவரை இச் சங்கத்தில் பதிவு செய்யத்தவறிய பழைய மாணவ, மாணவிகளும் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

M. SITHAMPARANATHAN,
Secretary,
J. C. A. A,
Vaddukoddai.

[சி-2739]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில்: | | தாய் மண்ணில்: |
|---|---|---|
| 06 | | 14 |
| — | | — |
| 01 | | 07 |
| — | | — |
| 1976 | | 1991 |



கந்தசாமி சரவணபவான்
(வீரவேங்கை ஜெகன், திருகோணமலை)
திதி: 03 — 07 — 1992

மகனே உன் அன்பான
புன் சிரிப்பாலும் பண்பான பேச்சாலும்
பணிவான நடத்தையாலும்
எம் இதயம் கவர்ந்த செல்வமே!
காலன் உன்னை இளம் வயதில் பறித்தாலும்,
ஓராண்டு சென்றாலும்
உம்மை எங்களால் மறக்க முடியவில்லை!

இவருடன் களப்பலியடைந்த அனைத்து பேராளிகளினதும் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடி நிற்கும்:
அப்பா, அம்மா, சகோதரிகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

பளை. [4906]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நல்லூரைச் சேர்ந்த எனது அடையாள அட்டை (627580819V), அனுமதிச் சீட்டு, கடிதங்கள், வங்கி பாஸ் புத்தகம் [22538] ஆகியன ஊரியான் இக்கரையில் 25-6-92 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். ந. பிரபா, இல. 19, பண்டாரக்குளம், நல்லூர். [21607]

பாலசிங்கம் லிங்கமூர்த்தி, ஆகிய எனது மூக்குக்கண்ணாடி (Bifocal) குடத்தனைக்கும், அம்பனுக்கும் இடையில் 29-6-92 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, அம்பன் காணிக்கிளை, கச்சேரி, யாழ்ப்பாணம் அல்லது வேம்படி, வல்வெட்டித்துறை என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5118)

### இலவச திருமண சேவை

34 வயது, விசாகம், செவ்வாய் 7, ஜேர்மனியில்தொழில் புரிபவருக்கும், 33 வயது, திருவோணம், செவ்வாய் 12, நெதர்லாந்தில் தொழில் புரிபவருக்கும் மணப்பெண்கள் தேவை. து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [5109]

33 வயது, ரோகிணி பிரபல கொழும்பு 'Rest Inn' மருதானை Lodge உரிமையாளருக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா. நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம். [5110]

### பழைய மணிக்கூடுகள்

பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும், விற்கப்படும். பழுதடைந்த மணிக்கூடுகளும், உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் கடிகாரங்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், ஆஸ்பத்திரி வீதி பஸ் நிலையம் முன்பாக - மேல்மாடி, யாழ்ப்பாணம். [5119]

**புதிய உயர் கல்லூரி,**
**ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**O/L புதிய துரித மீட்டல் வகுப்புகள்**

**ஆரம்பம்:**

**04-07-1992**

மாலை 3—00 மணி.

முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| கணிதம் | — கதிர் |
| விசமூகக்கல் | — கியூபேட் |
| விஞ்ஞானம் | — தயாநிதி |
| தமிழ் | — பிரதீபன் |
| ஆங்கிலம் | — ரவீந்திரன் |
| வர்த்தகம் | — ஸ்ரீ |

ஆண்டு 11, 10, 9 வகுப்புகளுக்கான ''கேத்திரகணிதம்'' அடிப்படை அறிவில் இருந்து கற்பித்தல்.

**ஆரம்பம்:**
04—07—1992 மாலை 4—00 மணி
(சி-2733)

### புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு - 5)

யாழ். மாவட்டத்தில் வருடாவருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் ஞாயிறு தோறும் மு. ப. 8-00 — மு. ப. 11-00, நேரங்களில் ஆண்டு -5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை நடத்தப்படும். பதிவு செய்து தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [21605]

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும். குடும்பப் பிரச்சினை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96, கோவில் வீதி, [ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி], நல்லூர். [21608]

### மணமகள் தேவை

இந்து, வயது 38 உடைய [செவ்வாய் குற்றமற்ற] கனடாவில் தொழில்புரியும் மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. புகைப்படம், மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். 420, மே/பா, உதயன். (21595]

### ஆசிரியர் தேவை

உடுவிலில் வசிக்கும் G.C.E O/L பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவிக்கு தனிப்பட்ட முறையில் தமிழ், சமூகக்கல்விப் பாடங்கள் கற்பிக்க ஆசிரியர் தேவை. கட்டணம் பற்றி தீர்மானிக்கலாம். இல. 421, மே/பா, உதயன். [21616]

### திருமண சேவை

நல்லூர் ஓய்வூதியர் சங்கம் சேவை அடிப்படையில் திருமண சேவை ஆரம்பித்துள்ளது. சகல தரப்பிலும் தகுதி. வயதிலும், உள்ளூர், வெளியூர்க் குறிப்புகள் உண்டு. நலன் விரும்பிகள் முழு விவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். செயலாளர்: 52, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [21604]

**1992 / 1993**

**G. A. Q. | 1st in Com.**

யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கூறப்பட்ட பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 04-07-1992 (8 மணி)


நிர்வாகி,
எஸ். அருள்நங்கை.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-2738]

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



உதிப்பு: 13 — 04 — 1948

உதிர்வு: 14 — 07 — 1991

அமரர்
**கார்த்திகேசு சிவசிதம்பரம்**
[பிரதம எழுதுநர், மாவட்டநீதிமன்று - சாவகச்சேரி]

திதி: 03 — 07 — 1992


ஆண்டொன்று ஓடியது அருமை அப்பா!
அழுதழுது கண்ணீரும் வற்றிப் போச்சு
வேண்டுகின்றோம் தினம் தினம் இறைவன் தன்னை
வீணாக ஏன் எம் அப்பாவை பறித்தீர் என்று,
கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்தீர்!
கனவாக நீர் கண்டவற்றை நிறைவே செய்வோம்
விண்ணுலகை அலங்கரிக்கும் எங்கள் தெய்வம்
வழிவகுத்து எம்மவர்க்கு நல் வாழ்வைத் தாரும்.

அன்பு மறவாத:
மனைவி, மக்கள்,
உறவினர்கள்.

குடாரப்பூர்,
நாகர் கோவில்.

[சி-2173]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 18 — 03 — 1964

இறப்பு: 14 — 07 — 1991

**அமரர் குமாரலிங்கம் றஞ்ஜகுமார்**
[விரிவுரையாளர், அரசறிவியல், யாழ்/ பல்கலைக்கழகம்

திதி: 03 - 07 - 1992

அறிவெனும் ஒளிவிளக்காம் - நீ
அணைந்ததினாலே
இருளை அணைத்தவர்களானோம்!
எதிர்பார்க்கப்பட்டதாலே
ஏமாற்றப்பட்டோம் - உன்னை
நினைவு கூருகிறோம்
இன்று மட்டுமல்ல என்றுமே!

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

- குடும்பத்தினர்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

[21540]

## ஓராண்டு நினைவஞ்சலி



பிரமன் படைப்பில்: 03 — 09 — 1948

காலதேவன் அழிப்பில்: 16 — 06 — 1991

அமரர்
**சிற்றம்பலம் தியாகராஜா**
[இலங்கை மின்சாரசபை, வேலணை]

திதி: 03 - 07 - 1992

பூவுலகில் காலமெனும் சக்கரத்தில் மதியொடு
தோற்றமளித்தாய்
தாளமெனும் வாழ்வினிலே ஏற்றம் கொடுத்தாய்
கோலமெனும் சிங்காரத் தோற்றத்தில் எம்மோடு
வாழ்ந்திட்டாய்

இதைக்கண்ட காலதேவனவன் அரவமாய் வந்து
பரந்தாமன் பாதம் நாட வைத்தனனோ
தனிமையாய் வாழும் தலைவன் என்று
படைத்தவன் எழுதினானோ?

இளமை நிறைந்த கனவுகள் தூக்கம்
கொடுக்குதில்லையையா
தனிமை நிறைந்த வாழ்க்கையோ இன்பம்
கொடுக்குதில்லையையா
இதயங்களோ துடிக்குதையா இல்லறமோ குமுறுதையா
உதயமோ புலரவில்லை உள்ளங்களோ உறங்கவில்லை
உமது நினைவுகளோ எம் நெஞ்சை விட்டு
அகலவில்லையையா

சாந்தி!! சாந்தி!! சாந்தி!!!

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, தந்தை, மாமி, சகோதரி,
மைத்துனர்மார், மைத்துனிமார், மக்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.
(இலங்கை மின்சார சபை, வேலணை)

இல. 235, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(21606]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இருமுனைப் பொறுப்பு

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும், இக்கட்டான இந்தக் கால கட்டத்திலும், எமது தமிழ் மாணவர்கள் கல்வியில் ஆர்வத்துடன் விளங்குவது மகிழ்ச்சிக்குரியது. கல்வி அழிந்தால் எமது சுதந்திரம் அழிந்துவிடும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா.

தமிழர்களின் பெரும் சொத்தும், சிறப்பும் கல்வியே. அதுவே அவர்களுக்குச் சீரையும் மதிப்பையும் தருவது. அவர்களைக் கண்டே சிங்களவர்களுக்கு, தமிழருக்கு எதிரான பகைமையும், பொறாமையும், சூழ்ச்சியும் பிறந்தன.

தமிழர்களின் கல்வி முன்னேற்றத்தைத் தடுத்து, அதற்கான வசதிகளை நிறுத்தி, அறிவு நிலையை அழித்தால் மட்டுமே அவர்களை அடிமைகளாக வைத்திருக்க முடியும் என்பது சிங்கள ஆட்சியாளர்களின் தத்துவம்.

அந்தத் தத்துவத்துக்குச் செயல் வடிவம் கொடுக்கும் குறிக்கோளுடனேயே கொழும்பில் உள்ள ஜனாதிபதி முதல் கல்வி அமைச்சின் சாதாரண உத்தியோகத்தர் வரை, உயர் கல்வி அமைச்சர் முதல் அறிஞர்கள், கல்விமான்கள் வரை செயற்படுகின்றனர்!

தமிழர்களின் கல்வி வளத்தை எங்கெங்கே, எப்படி எப்படியெல்லாம் வேரறுக்க முடியுமோ அங்கெல்லாம் அவ்வாறே செய்வதில் அக்கறையில் உள்ள சகல மட்டத்தினரும் மிகக் கூர்மையாகச் செயற்படுகின்றனர்.

தமிழர்களின் அரசியல், பொருளாதார சுபீட்சங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதானால் அவர்களின் கல்வி வளத்தை வேரறுத்துவிட வேண்டும் என்பதும் சிங்களப் பேரினவாதத்தின் நிலைப்பாடாகும்.

எனவே, தமிழர்கள் — தமிழ்ப் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள், கல்விமான்கள் ஆகிய சகல தரப்பினரும் — தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரிய சொத்தான கல்வி வளத்தைக் காப்பாற்றுவதிலும், பேணி வளர்ப்பதிலும் மிக அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

எங்கள் வருங்காலச் சந்ததியினருக்குக் கல்வி வசதிகளை அளிப்பதிலும், காலத்துக்கு உகந்த கல்வியைப் புகட்டுவதிலும் அரசாங்கத்தை நம்பியிருக்காமல், அதில் தங்கியிருக்காமல், எமது சொந்த முயற்சிகளைத் தொடங்க வேண்டும். எங்கள் முதாதையர்கள் தமது அறிவை வளர்க்கச் சிங்கள அரசுகளை நம்பியிருக்கவில்லையே!

கல்வி என்பது வெறும் புத்தகப் படிப்புடன் மட்டும் நிற்காமல், பொருளாதார வளர்ச்சியை நோக்காகக் கொண்டதாகவும் அமைவது அவசியமாகும். தமிழருக்கு அரசியல் சுதந்திரம் கிடைக்கும்போது பொருளாதார சுதந்திரமும் — தங்கு நிலை இல்லாத சுயசார்ப்புப் பொருளாதாரமும் — அவசியமாகும். சுயசார்புப் பொருளாதார நிலையை எய்துவதற்கு தொழில் முறைக் கல்வியே அத்திவாரமாக அமையும்.

மொத்தத்தில் — கல்வி வளம் பாதிக்கப்படாமல் பேணிக் காத்து வளர்க்கும் பணி, தொழில் முறை சார்ந்த புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்தும் பணி ஆகிய இருமுனைப் பெரும் பொறுப்பு தமிழ் அறிஞர்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகிய நான்கு தரப்பினருக்கும் உண்டு.

# ஜனாதிபதித் தேர்தல் வழக்கில் பிரேமா தோற்றால் என்னவாகும்?

## அரசியல் குழப்ப நிலைமை தெற்கில் தோன்றக் கூடும்

ஜனாதிபதித்தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான விசாரணை, 530 நாட்கள் நடைபெற்ற பின்னர் முடிவடைந்திருக்கிறது. தீர்ப்பு வழங்குவதை ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் ஒத்திவைத்திருக்கிறது.

தீர்ப்பு எவ்வாறு அமையும்? தேர்தல் வழக்கில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தோற்றால் என்ன நிலை உருவாகும்? — கொழும்பு சட்டத்துறை வட்டாரங்களில் இத்தகைய கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

இந்த வழக்கைப் பொறுத்தவரை நீதிமன்றத் தீர்ப்பு மூன்று வகைகளில் ஏதேனும் ஒன்றாக இருக்கக் கூடும் என ஊகிக்கப்படுகிறது.

(i) வழக்கைத் தள்ளுபடி செய்து, திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் மனுவை நிராகரித்து, நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலையும், அதில் பிரேமதாஸா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதையும் சட்டரீதியானவை என்று ஏற்றுத் தீர்ப்பளிக்கலாம்.

(ii) அல்லது பிரேமதாஸாவின் தெரிவை நிராகரித்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மற்றொருவர் தெரிவு செய்யப்பட்டதாக நீதிமன்றம் அறிவிக்கலாம்.

(iii) அல்லது நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தல் ஒட்டுமொத்தமாகச் செல்லுபடியற்றது என்று தீர்ப்பளித்து புதிய ஜனாதிபதித் தேர்தலை நடத்த நீதிமன்றம் உத்தரவிடலாம்.

முதலாம் வகையான தீர்ப்பு வழங்கப்பட்டால் பிரேமதாஸாவே தொடர்ந்து ஜனாதிபதி பதவியில் இருப்பார்; பெரும் அரசியல் மாற்றங்கள் எதுவும் ஏற்படமாட்டாது.

இரண்டாம் வகையான தீர்ப்பை நீதிமன்றம் வழங்குவதற்கு — அதாவது பிரேமதாஸா தவிர்ந்த மற்றொருவர் குறிப்பாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார் என்று நீதிமன்றம் அறிவிப்பதற்கு — வாய்ப்புகள் குறைவு என்று சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டனர்.

ஆனால் மூன்றாம் வகையான தீர்ப்பை — அதாவது நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் சட்ட ரீதியாகச் செல்லுபடியற்றது என்று — நீதிமன்றம் அறிவித்தால் பெரும் அரசியல் சிக்கல்கள் எழும் என்று கூறப்படுகிறது.

### 3 மாதங்களில் தேர்தல்

இத்தகைய தீர்ப்பை நீதிமன்றம் வழங்கினால் அடுத்து நடப்பது என்ன?

★ நீதிமன்றத் தீர்ப்பு வெளியான கையோடு ஜனாதிபதி பிரேமதாஸா தமது பதவியை இழந்தவராகக் கருதப்படுவார்.

★ அத்தகைய தீர்ப்பு வழங்கப்பட்டால் தீர்ப்பு வெளியான திகதியிலிருந்து மூன்று மாத காலத்தினுள் புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அரசமைப்பின் 39(i) ஆம் பிரிவு வலியுறுத்துகிறது.

★ நீதிமன்றத் தீர்ப்பு வெளியான திகதியில் இருந்து தேர்தல் நடைபெற்று புதிய ஜனாதிபதி பதவியேற்கும் காலம் வரை ஜனாதிபதியின் பொறுப்புகளை பிரதமர் ஏற்று பதில் ஜனாதிபதியாக செயற்பட வேண்டும் என்று அரசமைப்பின் 39 (ii) ஆம் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

– கூர்விழியான் –

★ அத்தகைய சந்தர்ப்பத்தில் பதில் ஜனாதிபதி பொறுப்பை ஏற்கும் பிரதமர், தாம் வகித்த பிரதமர் பதவிக்கு அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர் ஒருவரை பிரதமராக நியமிக்க வேண்டும்.

★ எனினும் நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகும் வேளையில் பிரதமர் பதவி வெற்றிடமாக இருப்பின் பதில் ஜனாதிபதிப் பதவியை சபாநாயகர் ஏற்க வேண்டும்.

— இவ்வாறு அரசமைப்புச் சட்டத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித்தேர்தல் செல்லுபடியற்றது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்து, மூன்று மாதத்திற்குள் புதிய தேர்தலை நடத்த உத்தரவிட்டால் அத்தகைய தேர்தல் ஒன்றை உடனடியாக நடத்தக்கூடிய தள நிலைமை உண்டா என்னும் கேள்விக் குறியே.

### தேர்தல் என்பது இயலாத ஒன்று

வடக்கு - கிழக்கில் தற்போதுள்ள யுத்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை அமைதியான முறையில் நடத்துவது இயலக் கூடிய காரியம் அல்ல.

நீதிமன்றத் தீர்ப்புப்படி தேர்தல் நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டு, ஆனால் நாட்டு நிலைமையால் தேர்தல் நடத்த முடியாமல் போனால் அதன் பின் ஜனாதிபதிப் பதவியை யார் வகிப்பது? — இதற்குச் சட்டத்தில் தெளிவான விடை ஏதும் இல்லை. அப்படியான சந்தர்ப்பம் வந்தால் அது அரசியல் குழப்பத்தையே ஏற்படுத்தும்.

நடைபெற்று முடிந்த தேர்தல் ஆட்சேபனை வழக்கில் தாம் தோல்வியடையக் கூடிய நிலை இருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸா உணர்ந்தால், நீதிமன்றத் தீர்ப்பு வெளியாவதற்கு முன்னரே புதிய ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிடலாம் என சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

ஆனால் ஜனாதிபதி பிரேமதாஸா அப்படிச் செய்யமுடியாது; அதற்குச் சட்டத்தில் இடமில்லை என்று சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

1982 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையிலான அரசு கொண்டு வந்த அரசமைப்புத் திருத்தத்தின் படி —

ஜனாதிபதி ஒருவர் தமது பதவிக்காலத்தில் முதல் நான்கு வருடங்கள் முடிவுற்ற பின்னர், எஞ்சிய இரண்டாண்டு காலத்தில் விரும்பிய போது தேர்தலை நடத்துவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

ஆனால், பிரேமதாஸா 1989 பெப்ரவரி 4 ஆம் திகதி பதவி ஏற்றிருப்பதால் 1993 பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை உத்தரவிடுவதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை என்று சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. ★

## மிக நீண்ட வழக்கு

1988 ஆம் ஆண்டு டிசம்பரில் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் திரு. ஆர் பிரேமதாஸா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை ஆட்சேபித்து தேர்தலில் தோல்வியுற்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தேர்தல் ஆட்சேபனை வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கில் எதிர்மனுதாரர்களாக திரு ஆர். பிரேமதாஸா, சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

1989 மார்ச்சில் தேர்தல் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டது அப்போது எதிர்மனுதாரரான பிரேமதாஸா தரப்பில் கிளப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை, சுமார் மூன்று மாதகால விசாரணையின் பின் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதான வழக்கு மீதான விசாரணை ஆரம்பமானது.

சுமார் 530 நாட்கள் விசாரணைகள் நடைபெற்றன. 26 ஆயிரத்து 500 பக்கங்களில் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்கு விசாரணை ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றில் விசாரிக்கப்பட்டது. விசாரணை ஆரம்பமான பின்னர், ஐந்து நீதியரசர் அணியில் நால்வர் ஒருவர் பின் ஒருவராக ஓய்வு பெற்றுச் செல்ல, அவர்களின் இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரிக்க ஆரம்பித்த பின்னர் இடையில் ஓய்வு பெற்றுச் சென்ற நால்வரில் இருவர் பிரதம நீதியரசர்களாவர்.

இறுதியாக இந்த வழக்கு விசாரணைகள் பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி சில்வா, நீதியரசர்கள் பி. இராமநாதன், எஸ் பி. குணவர்த்தனா, பிரியந்த பெரேரா, ஏ. எஸ். விஜேதுங்க ஆகியோர் முன்னிலையில் முடிவுற்றன.

பிரதிவாதி தரப்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் தமது தொகுப்புரையை மட்டும் 50 நாட்கள் நடத்தினார். இலங்கையின் சட்டமன்றச் சரித்திரத்தில் இதுவே மிக நீண்ட காலம் நடந்த வழக்கு எனக் கொள்ளப்படுகிறது.

# விடுதலைக்கும் மொழிச் சிறப்புக்கும் தொண்டாற்றி வருகிறார் அடிகளார்

## மணிவிழா வைபவத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 3

வண. பிரான்சிஸ் ஜோசவ் அடிகளார் மதத்திற்கு அப்பால் எமது மண்ணின் விடுதலைக்கும் மொழியின் சிறப்புக்கும் தொண்டாற்றுபவர். அடிகளார் சிறந்த கல்வியாளர் மட்டுமன்றி சமூக சேவையாளரும் ஆவார்.

நல்லை ஆதீனத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வண. பிரான்சிஸ் ஜோசவ் அடிகளாரின் மணிவிழா வாழ்த்து வைபவத்தில் உரையாற்றும் போது பேராசிரியர் இ. பாலகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

நாகலிங்கம் நூலாலயத்தின் ஆதரவில் நடந்த இந்த வைபவத்திற்கு திரு. என். சண்முகலிங்கன் தலைமை வகித்தார்.

நாவலர், விபுலானந்தர் போன்று தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்க ஜோசவ் அடிகளார் இசையுடன் தமிழ் மொழிக்கும் கிறிஸ்தவத்திற்கும் உள்ள ஈடுபாட்டை அறிவியல் ரீதியாக ஆராய்ந்து விளக்கியவர். தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை வெளி நாடுகள் தெரிந்து கொள்ளக் கூடிய ஆதாரங்களை அவர் எடுத்துக் காட்டி வருகிறார் — என்று பேராசிரியர் கணேசலிங்கம் தனது உரையில் கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தனது உரையில் —

அடிகளின் பணி கல்வியோடும், சமயத்தோடும் மட்டுமன்றி சமூகத்தோடும் நெருங்கியதாக இருப்பதை நான் பல தடவைகளில் கண்டுள்ளேன். தமிழுக்கும், தமிழினத்திற்கும் அவரது தொண்டு என்றும் தொடர இறைவன் அவருக்கு எல்லா வகையான அருளையும் நல்க வேண்டும் — என்றார்.

நாகலிங்கம் நூலாலயத்தின் சார்பில் அடிகளாருக்கு மேற்படி நிலையத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட கேடயத்தை திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம் வழங்கினார்.

வண. பிதா பிரான்சிஸ் ஜோசவ் அடிகளார் தமது பதிலுரையில் —

தமிழினத்தின் பெருமையையும், மாண்பையும் பேணிக் காக்கும் வகையில் இந்துக்கள் கிறிஸ்தவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும். நீங்கள் எல்லோரும் என்மீது காட்டும் அன்பில் நான் இறைவனைக் காண்கின்றேன் என்று கூறினார்.

வைபவத்தில் மற்றும் பலர் உரையாற்றினர். இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(ஒ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில்:

## மனித உரிமைக்குழு அலுவலகம் இன்று திறந்து வைக்கப்படும்

மட்டக்களப்பு, ஜூலை 3
மனித உரிமைகள் குழு பணியகத்தின் அலுவலகம் ஒன்று இன்று மட்டக்களப்பில் திறந்து வைக்கப்படும் என்று பணியகத்தின் தலைவர் கே. எச். ஏ. சூலா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து காணாமல் போனோர்கள் பற்றி முறையாகப் பதிவு செய்வதுடன் தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் மனித உரிமைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலும் இந்த அலுவலகம் ஈடுபடும் என்றும் அவர் சொன்னார்.

இதே வேளை— தென் பகுதி தடுப்பு முகாம்களிலும் மட்டக்களப்பு சிறை மற்றும் பொலிஸ் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் பற்றிய விவரங்கள் மட்டக்களப்பு சமாதானக் குழு அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படும் என்றும் அவர் மேலும் சொன்னார். [த]


## கண்ணீர் அஞ்சலி

மண் மீட்புப் போரில் தன்னை அர்ப்பணித்த
**2 ஆம் லெப்டினன்ட் மணிமாறன்**
(சர்மா)

''விடியல் கீதத்தை இசைக்க எண்ணி
விழிகள் இமைக்க மறந்தனையோ......
பொடிப்பொடியாய் உன் உடல் போயினும்
— உன் இலட்சியப்
போரினைத் தொடர்வோம் நாம்.''

91ஆம் ஆண்டு விஞ்ஞான மாணவிகள்-
வேம்படி மகளிர் கல்லூரி,
(21623) திருக்குடும்ப கன்னியர் மடம்.


## மரண அறிவித்தல்கள்

### இராசரெத்தினம் ஆனந்தராஜா (ரகு)
மேஜர் விடுதலை (லம்பா)

வேலணை மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் மேற்கில் வசிப்பவருமான இராசரெத்தினம் ஆனந்தராசா [ரகு] 30-6-92 இல் அகால மரணம் அடைந்துவிட்டார். இவர் இராசரெத்தினம்-பத்மா ஆகியோரின் அன்புப் புதல்வரும், பத்மராசா [மருத்துவ பீடம் - யாழ்.], சரஸ்வதி [ரமா] ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேட்டுக்கொள்கின்றோம்.

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தகவல்
இ. பத்மராசா
(சகோதரர்)
[21620]

### திரு. பொ. சுந்தரேஸ்வரன்
[பிரதம புகையிரத பாதுகாவலர், மாத்தளை]

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திரு. பொன்னம்பலம் சுந்தரேஸ்வரன் அவர்கள் 01-07-92 (புதன்கிழமை) போதனா வைத்தியசாலையில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பொன்னம்பலம் - புவனேஸ்வரியின் அருமை மகனும், திருமதி திரவியம் பூலோகராஜாவின் மருமகனும், சந்திரமதியின் அன்புக் கணவரும், சுமதியின் (ரமா) (யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் - ஆங்கிலம், பழைய மாணவி) அன்புத் தந்தையும், சுந்தரராஜா (கொழும்பு), உமாமகேஸ்வரி, சுந்தரமூர்த்தி [லண்டன்], ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகம் (இளைப்பாறிய அதிபர், முப்புதுக்குடியிருப்பு), சரோஜா (லண்டன்), புஸ்பராணி, தனபாலசிங்கம், சிவனேசராஜா (கனடா), யோகராணி, விஷ்ணுதாசன், சந்திரகாந்தா, ஆகியோரின் அருமை மைத்துனரும், சிவயோகநாதன், தர்மேந்திரா, தர்மபுத்திரி, கௌரிமனோகரி ஆகியோரின் சகலனும், சடாட்சரலிங்கம் (பிரான்ஸ்), சாந்தகுமார் (சம்பியா), புவனேந்திரன் [யாழ். மருத்துவபீடம்], காலஞ்சென்ற உதயவர்மன் (பேபி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்சன், சுரேந்திரன், சுகிதரன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

90, கோவில் வீதி,
நல்லூர்.
தகவல்:
விஷ்ணுதாசன்.
[மைத்துனர்]
[21625]

# இந்திய ஆலோசனைப் பிரகாரமே இல.-அமெ. உறவு நிலை உருவாகும்

## அரசியல் விமர்சகர் 'திரு' உரை

யாழ்ப்பாணம், ஜூலை 3
ஆசிய - பசுபிக் பிராந்தியங்களில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த இந்தியாவை நட்பு நாடாக்க அமெரிக்கா முயற்சி மேற்கொண்டுள்ளது. இந்த நட்பு நிலை உருவாக தமது உறவு நிலைகளில் இரு நாடுகளும் சில விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட வேண்டி இருக்கும்.

இந்த வகையில் இலங்கையுடன் அமெரிக்கா கொண்டுள்ள உறவு இந்தியாவின் ஆலோசனையை அனுசரித்தே அமையவேண்டிய அவசியம் உருவாகும்.

இப்படிக் கூறினார் அரசியல் விமர்சகர் திரு. மு. திருநாவுக்கரசு.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று மாலை நடந்த மருத்துவ பீட மாணவன் சுதர்சன், விஞ்ஞான பீட மாணவி நித்திலா ஆகியோரது நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கும் போது அவர் இப்படிக் கூறினார்.

பல்கலைக்கழக மறுமலர்ச்சி மன்றத்தைச் சேர்ந்த திரு. ஜெயராஜா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் ''மாறும் உலகில் இந்தியாவின் புதிய வெளியுறவுக் கொள்கை'' என்னும் தலைப்பில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

வளைகுடா நெருக்கடி யுத்தத்தின் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் ஒற்றுமை, சமாதானம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் ஆசிய, பசுபிக் பிராந்தியங்களில் பல்இனப் பிரச்சினை, எல்லைப் பிரச்சினை ஆகியன தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

அமெரிக்க முதலீட்டால், தொழில்நுட்பத் துறையில் சீனா முன்னேறி அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என கருதப்படுகிறது. இந்நிலையில் அமெரிக்கா இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை வளர்க்க விரும்புகிறது.

இந்த அடிப்படையில் இந்தியா தனது பொருளாதாரக் கொள்கைகளை மாற்றவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள சிறுபான்மை அரசு தன்னை பாதுகாக்கவும், நிலத்தால் சூழவுள்ள நாடுகளிடம் இருந்து வரும் அச்சுறுத்தலில் இருந்து தன்னை விடுவிக்கவும், அமெரிக்காவுடன் நட்புக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

விசாகப்பட்டினத் துறைமுகத்துக்கு அமெரிக்க யுத்த மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் வந்து தங்கிப் போக இரு நாடுகளும் விரைவில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யவும் இருக்கின்றன.

இவ்விரு நாடுகளும் தமக்குள் மிக நெருக்கமான நட்பை உண்டாக்குவதற்கு முன்னர் தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் கொண்டுள்ள உறவு விடயத்தில் விட்டுக்கொடுத்து செயற்பட வேண்டியுள்ளது.

அதனாலேயே இலங்கை - அமெரிக்க உறவு விடயத்தில் இந்தியாவின் சொல்லை அனுசரித்தே அமெரிக்கா செயற்பட வேண்டியுள்ளது — என்றார்.

பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர் திரு. சந்திரசேகர் மறைந்த போராளிகள் இருவரைப் பற்றியும் நினைவுரை ஆற்றினார். (அ-3)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 3
சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளி பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் திரு வி. ஏரம்பமூர்த்தி தலைமையில் நடைபெறும். [இ]

## சோழர் கால

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ப. புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

இவ் விக்கிரகம் காணப்பட்ட இடத்தில் புராதன மட்பாண்ட ஓடுகளும், செங்கட்டிகளும் கண்டெடுக்கப்பட்டன.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் சிலை ஆறு அங்குல உயரமும், ஒரு றாத்தல் எடையும் கொண்டது; செம்பினால் செய்யப்பட்டது. இந்த முழு விக்கிரகத்தின் ஒரு கரம் அபயகஸ்தத்தையும், அடுத்த கரம் வரதகஸ்தத்தையும் குறித்து நிற்கின்றன. தலையில் உள்ள முடி வேல் போன்ற வடிவத்தில் அமைந்துள்ளது.

விக்கிரகத்தின் பீடத்தில் சாசனம் எழுதப்பட்டுள்ளது. அது தேவநாகரி எழுத்தில் 'ஸ்ரீ புவனேஸ்வரி'' என எழுதப்பட்டுள்ளது. இவ்விவடிவம் முற்பட்ட சோழர் காலத்துக்கு [10 ஆம் 11 ஆம் நூற்றாண்டு] உரியது என்பதை உறுதிப்படுத்துவதாக திரு. புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

இச்சிற்பத்தில் தென்னிந்திய நாகபட்டின கலை மரபின் சாயல் காணப்பட்டாலும் இலங்கைக்கே உரிய சில தனித்துவமான அம்சங்களும் உள்ளன.

இவ்விக்கிரகம் இப்போது யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் சிலை கண்டுபிடிக்கப்பட்ட இடத்துக்கு அருகில் ஏற்கனவே விஷ்ணு விக்கிரகம், சோழ நாணயம், வேறு நாணயங்கள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டன. [அ]

## கட்டைக்காட்டில் சூடுபட்டு இரு பொதுமக்கள் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 3
கட்டைக்காட்டுப் பகுதியில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் நேற்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பொது மக்கள் இருவர் காயமடைந்தனர்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த மனுவல் அல்பேட் (வயது 27) அச்செழுவைச் சேர்ந்த தியாகு (வயது 24) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவார்.

காயமடைந்த அல்பேட் வண்ணாங்கேணியில் தங்கியிருந்து கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தவர்.

இவர் சுகயீனம் காரணமாக சைக்கிளில் யாழ்ப்பாணம் வரும் போது இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-15)

## சண்டையை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கொண்டு—

மோதல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று பெரிதும் நம்பப்படுகிறது.

இந்த இடைவெளியின் போது வடமராட்சி கிழக்கிலும், பளைப் பிரதேசத்திலும் விமானத் தாக்குதல்களை நடத்தி மக்களைப் பீதியடையச் செய்து அவர்களை அந்த இடங்களிலிருந்து அகற்றப் படையினர் திட்டமிட்டுச் செயற்படுவதாகச் சொல்லப்படுகிறது.

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியிலும் அதனை அண்டிய குடியிருப்புப் பகுதிகளின் மீதும் நேற்று அகோர குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. அப்பகுதிகளில் நேற்று ஐந்தாவது நாளாக பயங்கர குண்டுச் சத்தங்கள் கேட்டபடி இருந்தன. அதேசமயம் ஷெல், பீரங்கித் தாக்குதல்களும் இடம்பெற்றன.

### இரவு வேளைகளில்

ஸ்ரீலங்கா விமானப் படையினர் இரவு வேளையிலும் இலக்கு ஏதுமின்றி கண்மூடித்தனமான முறையில் அப்பகுதிகளில் குண்டு வீச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

இதே வேளை—

வடமராட்சி கிழக்கில் நாகர் கோவில் பகுதியிலும் மற்றும் இயக்கச்சி — பளை பகுதிகளிலும் நேற்று அதிகாலை வேளை அவ்ரோ விமானம் பீப்பாய் குண்டுகளைக் கண்டபடி வீசித் தாக்கியது. நேற்று முன்தினம் இரவு 9. 40 மணியளவில் புதுக்காட்டுப் பகுதியிலும் குண்டுவீச்சு நடத்தப்பட்டது.

அவ்ரோ விமானம் இரவு வேளைகளில்பச்சிலைப் பள்ளிப் பகுதியை அடிக்கடி வட்டமிடுவதால் இப்பகுதி மக்கள் இரவில் பதுங்கு குழிகளுக்குள்ளேயே பயத்துடன் காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது. [ஓ-117]

## தாக்குதலுக்கு முன்னோடியாம்

''வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு நடவடிக்கைகள் யாழ். குடாநாடு மீதான தாக்குதலுக்கு ஒரு முன்னோடியே.''

கூட்டுப் படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வன்சிங்கா கொழும்பு செய்தியாளர்களிடம் இப்படிக் கூறினார். (இ-3)

## கின்னஸ்ஸில்

மதுரையில் அ. தி. மு. க. மாநாட்டின் போது இடம் பெற்ற பேரணி உலக சாதனைப் புத்தகமான கின்னஸ்ஸில் இடம்பெறும் என அதன் தலைவர்கள் தெரிவித்தனர். [ஓ-எ]

## வீடியோ காட்சிக்குத் தடை!

வீடியோ படக்காட்சிகள் நடத்தப்படுவதைத் தடை செய்ய சட்டம் ஒன்றை அரசாங்கம் கொண்டுவரவுள்ளது.

இதற்கான சட்டமூலத்தை தயாரிக்கும்படி சட்டமா அதிபர் ஏற்கனவே கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என்று கலாசார அமைச்சர் லொக்கு பண்டார தெரிவித்திருக்கிறார். [ஓ-எ]

## இந்திய அமைச்சரவை விஸ்தரிப்பு

இந்திய மத்திய அமைச்சரவை நேற்று விஸ்தரிக்கப்பட்டது.

இதன் மூலம் அமைச்சர்களின் எண்ணிக்கை 56 இல் இருந்து 62 ஆக அதிகரித்தது.

புதியவர்களில் 5 பேர் இணை அமைச்சர்கள், ஒருவர் துணைஅமைச்சர்.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த திரு. ஆர். எல். பாட்டியா என்பவர் வெளியுறவுத் துறை இணை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஏற்கனவே எட்வர்டோ பெலாறோ வெளியுறவுத் துறை இணை அமைச்சராக இருந்துவருகிறார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 220-ம் இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-07-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org